# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூன் 15, 2024

Weekly E-paper ● June 15, 2024




## அனைத்துத் தரப்பினரும் அதிருப்தி
## "நிலைக்குமா மோடி 3.0 ?"

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## தலித்துகளும் தண்ணீரும்

வெற்றிச்செல்வன்

## மணிப்பூரைப் பேசும் மோகன்பகவத்..?

தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்


வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● ஜூன் 15, 2024

Weekly E-paper ● June 15, 2024


# அனைத்துத் தரப்பினரும் அதிருப்தி

# "நிலைக்குமா மோடி 3.0 ?"

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**







நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெற இயலாமல் போனாலும் கூட்டணிக் கட்சிகளின் தயவுடன் மூன்றாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் ஏறியுள்ளார் நரேந்திர மோடி. கடந்த இரண்டு முறைகளைப் போல் இவர் இந்த முறை எளிதாக ஆட்சி நடத்த முடியாது என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்து. அதை உறுதிப் படுத்துவது போலவே அமைச்சரவை உருவாக்கத்தில் அனைத்துத் தரப்பினரின் அதிருப்திக்கும் ஆளாகியுள்ளது ஒன்றிய அரசு.

கூட்டணிக் கட்சிகளின் ஆதரவே இந்த அரசு அமைவதற்கு அடிப்படையாக இருப்பதால் அதற்கேற்ற அளவுக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் அளிக்கப்படும் என்ற தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது. பிரதமர் மோடி மற்றும் 71 பேர் அடங்கியுள்ள அமைச்சரவையில் கூட்டணிக் கட்சிகளுக்கு வெறும் 11 இடங்கள் மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளன. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள துறைகள் அனைத்தும் முக்கியத்துவம் இல்லாததாக இருப்பது அவர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தெலுங்கு தேசம் நிதி போன்ற துறைகளையும், ஐக்கிய ஜனதாதளம் இரயில்வே துறையும் கேட்டு நிர்ப்பந்தித்தது குறிப்பிடத்தக்கது.

தேசியவாத காங்கிரஸ் (அஜித் பவார்) கட்சி, கேபினட் அமைச்சர் பதவி ஒதுக்காமல் இணை அமைச்சர் பதவி ஒதுக்கியதால் அமைச்சரவையில் இணைய மறுத்து விட்டது. அதபோல் சிவசேனா (ஷிண்டே) கட்சி 7 மக்களவை உறுப்பினர்களைக் கொண்டுள்ள தங்களுக்கு கேபினட் அமைச்சர் பதவி ஒதுக்காமல், வெறும் இரண்டு மக்களவை உறுப்பினர்களை மட்டுமே கொண்டுள்ள மதச்சார்பற்ற ஜனதாதளம் கட்சியைச் சேர்ந்த ஹெச்.டி.குமாரசாமிக்குக் கேபினட் அமைச்சர் பதவி ஒதுக்கியதை நேரடியாகக் கண்டித்துள்ளது. அதன் தொடர்ச்சியாகவே சிவசேனா (ஷிண்டே) கட்சியின் தலைவரும் மராட்டிய முதல்வருமான ஏக்நாத் ஷிண்டே "பா.ஜ.க நானூறு இடங்களில் வெற்றி பெறும் என்று மோடி பேசியதால் வெற்றி பெற்ற பிறகு அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி விடுவார்கள் என்று அஞ்சியே மராட்டிய மக்கள் தங்கள் கூட்டணிக்கு வாக்களிக்க வில்லை" என்று வெளிப்படையாக பிரதமர் மோடியை விமர்சித்துள்ளார்.

ஒன்றிய அமைச்சரவையில் இரண்டு சீக்கியர்கள், இரண்டு பவுத்தர்கள் மற்றும் ஒரு கிறிஸ்துவர் என ஐந்து சிறுபான்மையினருக்கு இடமளிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...







முன்பக்கத் தொடர்ச்சி...

இருப்பினும் ஒரு இசுலாமியர் கூட அமைச்சரவையில் சேர்க்கப் படவில்லை என்பது இசுலாமியர் மீதான பா.ஜ.கவின் வன்மத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. பா.ஜ.க மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் ஒரு இசுலாமிய மக்களவை உறுப்பினர் கூட இல்லை என்றாலும் பா.ஜ.கவைச் சேர்ந்த ஒரு இசுலாமிய தலைவரையாவது அமைச்சரவையில் சேர்த்து அவரை மாநிலங்களவை உறுப்பினராக்கியிருக்கலாம்.

71 பேர் கொண்ட மோடியின் அமைச்சரவையில் 30க்கும் மேற்பட்டவர்கள் உயர்ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பதும், அதில் நிர்மலா சீத்தாராமன், ஜெய்சங்கர் போன்ற பலர் மக்களைச் சந்திக்காமலேயே மாநிலங்களவைக்கு தேர்வானவர்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. இந்தியா கூட்டணியை நோக்கி வாரிசு அரசியல் என்று விமர்சித்த பிரதமர் மோடி தனது மூன்றாவது அமைச்சரவையில் 22 வாரிசுகளுக்கு இடமளித்துள்ளது வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அமைச்சரவையில் 24 மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கியுள்ளதாக பா.ஜ.க சொல்வதை ஏற்க இயலாது. ஏனெனில் அது உண்மையான பிரதிநிதித்துவம் அல்ல. குறிப்பாக நிர்மலா சீத்தாராமன், ஜெய்சங்கர் மற்றும் எல்.முருகன் ஆகியோரை தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாக பா.ஜ.க கூறினாலும் அவர்கள் வெவ்வேறு மாநிலங்களில் இருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். அவர்களைத் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக எவ்வாறு ஏற்க முடியும்?

கூட்டணிக் கட்சிகளின் கடிவாளத்துடன் அமைந்துள்ள இந்த ஆட்சியில் பா.ஜ.க தனது இந்துத்துவ செயல்திட்டங்களை நிறைவேற்ற இயலாது என்பது அக்கட்சித் தொண்டர்களை அதிருப்திக்கு உள்ளாக்கி இருக்கிறது. அந்த வகையில் அனைத்துத் தரப்பினரின் அதிருப்தியோடு இந்த ஆட்சி அமைந்துள்ளது. அமைச்சரவை உருவாக்கத்திலேயே இவ்வளவு சிக்கலை எதிர்கொண்டுள்ள பிரதமர் மோடி அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எப்படி ஆட்சி நடத்தப் போகிறார் என்ற கேள்வியே இந்திய மக்கள் மனதில் தற்போது எழுந்துள்ளது.

காலம் கனியும்! காத்திருப்போம் !!

●




## பொதுக்குழு!
## பொதுச்செயலாளர் அறிவிப்பு!

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள கலைஞர் அறிவாலயம் அருகே, ரவி மினி ஹாலில் 23.06.2024 ஞாயிற்றுக் கிழமை அன்று நடைபெற இருக்கிறது. அன்று காலை 9:30 மணிக்குத் தலைமைச் செயற்குழுவும், 11 மணிக்குப் பொதுக்குழுவும் நடைபெற உள்ளது. பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கும் இப்பொதுக் குழுவில் பேரவையின் அனைத்துப் பொறுப்பாளர்களும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

சிற்பி செல்வராஜ்
(பொதுச் செயலாளர்)



*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## மணிப்பூரைப் பேசும் மோகன்பகவத்..?

நரேந்திர மோடி கூட்டணிக் கட்சிகளின் தயவுடன் ஆட்சி அமைத்துப் பிரதமர் 'பட்டம்'சூடி இருக்கிறார்

இன்னும் ஒரு வாரம் கூட நிறைவுபெறாத நிலையில், நாக்பூரில் பேசிய ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், மணிப்பூர் இன்னமும் எரிந்துகொண்டு இருக்கிறது. அதை யார் கவனிக்கப் போகிறார்கள்? உண்மையான சேவகர் கண்ணியத்தைக் கடைபிடிப்பார். ஆணவத்தைக் காட்டிக் காயப்படுத்த மாட்டார். தேர்தல் வாய்ச் சவடால்களை விட்டுவிட்டு, நாடு எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது, என்று சற்று காட்டமாகப் பேசியிருக்கிறார்

இதில் இரண்டு செய்திகள் இருக்கின்றன. ஆர்.எஸ். எஸ் இல் இருந்தாலும் அரசியல் அதிகாரத்திற்கு வந்த பின்னர், மோடியின் தனித்த சர்வாதிகார ஆணவம், ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச் சிந்திக்க வைத்திருக்கிறது.

அதனால்தான் மணிப்பூர் கலவரம் நடந்த நேரத்தில் வாய்திறக்காத மோகன் பகவத், இன்று மோடியை எச்சரிக்கும் விதமாக இப்படிப் பேசியிருக்கிறார்.

இது ஒருபுறம் இருக்க ஆர்.எஸ். எஸ் அமைப்பு 1925ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. எதிர்வரும் 2025ஆம் ஆண்டு அதற்கு நூறாம் ஆண்டாகும்

இந்த நூறாண்டு கால அரசியல் முன்னெடுப்புகள் மூலம் 'இந்து ராஷ்ட்ர'த்தை 2025இல் அமைத்துவிட வேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ் இன் கனவை 2024 பொதுத் தேர்தலில் 'இந்தியா கூட்டணி' தகர்த்துப் போட்டுவிட்டது. இப்பொழுது ஒன்றியத்தில் மோடியின் பா. ஜ.க அரசு ஒரு 'மைனாரிட்டி' அரசாகக் குறுகிவிட்டது

ஆர்.எஸ்.எஸ்இன் நூற்றாண்டு 'இந்து ராஷ்ட்ர' கனவு கலைந்ததாலும், அக்கனவு கலையக் காரணம் மோடியின் பத்தாண்டுகால சர்வாதிகார ஆட்சிதான் என்பதாலும் மோகன் பகவத் தன் குரலை உயர்த்தியிருக்கிறார் என்பதை அவரின் நாக்பூர் பேச்சின் மூலம் உணர முடிகிறது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408




திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய 'சுயமரியாதை இயக்க வரலாறு' நூலின் திறனாய்வுக் கூட்டம் 08-06-2024 அன்று சென்னை, தேனாம்பேட்டை அன்பகம் அரங்கில் நடைபெற்றது. திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் நூலைத் திறனாய்வு செய்து உரை நிகழ்த்தினார். இக்கூட்ட நிகழ்வுக்கு தோழர் மணிகண்டன் தலைமை தாங்க, வரவேற்பு உரையை தோழர் சொக்கலிங்கமும், இணைப்புரையை தோழர் திராவிடமணியும், நன்றியுரையை தோழர் மோகன்ராமும் நிகழ்த்தினார்கள்.

# தலித்துகளும் தண்ணீரும்


நூல் அறிமுகம்

**வெற்றிச்செல்வன்**

*1992 ஆம் ஆண்டு டப்ளின் நகரில் நடைபெற்ற பன்னாட்டு நீர் மற்றும் சுற்றுச்சூழல் மாநாட்டில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது : "தேவைப்படும் அனைத்துப் பயன்பாடுகளிலும் பொருளாதார ரீதியான மதிப்பை நீர் பெற்றுள்ளது. நீரை அதன் பயன்பாட்டின் அடிப்படையில் மதிப்பிடுவதை, ஒரு பொருளாதார இலக்காக அங்கீகரிக்க வேண்டும்" என்பதே அத்தீர்மானம். இயற்கையின் கொடையாகவும், அனைவருக்கும் பொதுவானதாகவும் இருந்த தண்ணீருக்கும் நிதி செலவிட வேண்டிய நிலையினை டப்ளின் மாநாட்டுத் தீர்மானம் ஏற்படுத்தி விட்டது. ஆனால் இந்தியச் சமூகத்தில் நீர் என்றைக்குமே பொதுவானதாக இருந்ததில்லை என்கிறார் நூலின் ஆசிரியர் கோ. ரகுபதி.*

*புனிதம் Vs தீட்டு என்கிற வருணாசிரமக் கோட்பாடு காரணமாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தண்ணீர் என்னும் உரிமை மறுக்கப்பட்டு வந்த துயர வரலாறை எடுத்துச் சொல்கிறது "தலித்துகளும் தண்ணீரும்" என்னும் இந்நூல். தண்ணீருக்கான உரிமை மறுக்கப்படுவதை வெறும் 'குடிமை உரிமை' அல்லது சமூக உரிமை' மறுக்கப்படுவது போல அல்லாமல் அதனை 'உயிர் வாழும் உரிமை' மறுக்கப்படுவதாகவே கொள்ள வேண்டும் என்பதை இந்நூலின் வழியாக நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.*

*இந்திய வரலாற்றில் நீருக்கும், நதிகளுக்கும் புனிதம் கற்பிக்கப்பட்டு, அவை பண்பாட்டு முக்கியத்துவம் பெற்றுள்ளன. இதன் காரணமாக நீரானது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்நியமாக்கப்பட்டு, ஒரு சில சமூகத்தினர் அதன்மீது ஏகபோக உரிமை செலுத்தி வருகின்றனர். நீர் உரிமையினை மையப்படுத்தித் தமிழ்நாட்டில் நடந்த பிரச்சினைகள், தலித்துகளின் போராட்டங்கள் பலரும் அறியாதவை. அவை அனைத்தையும் ஆவணப் படுத்தியுள்ளது இந்நூல். 1929 இல் செங்கல்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டில் "மனித நாகரிகத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் தடையான தீண்டாமையை ஒழித்து ரஸ்தாக்கள், குளங்கள், கிணறுகள், பாடசாலைகள், சத்திரங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலிய பொது ஸ்தாபனங்களைத் தட்டுத் தடங்கலின்றி அனுபவிக்க, சகல ஜனங்களுக்கும் சம உரிமை கொடுக்க வேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டும் இந்நூல், தாழ்த்தப்பட்ட மக்களின் நீர் உரிமைக்கான சுயமரியாதை இயக்கத்தின் முன்னெடுப்புகளை இன்னும் விரிவாக ஆவணப் படுத்தி இருக்கலாம்.*




**"தலித்துகளும் தண்ணீரும்"**

**ஆசிரியர் : கோ. ரகுபதி**

**பதிப்பகம் : காலச்சுவடு**

**பக்கங்கள் : 150**

**விலை : ரூ.190**

*பொதுச்சொத்துகளைத் தலித் மக்கள் அணுகுவதற்கும், அனுபவிப்பதற்குமான உரிமைகளை நிலைநாட்டுவதில் அரசின் போதாமைகளைச் சுட்டிக் காட்டுவதோடு, தலித்துகளுக்குத் தனியாகத் தண்ணீர்த் தொட்டிகளையோ, கிணறுகளையோ உருவாக்குவதைக் கண்டிக்கிறார் நூலாசிரியர். இது பொருளாதாரத்திற்கும், சுற்றுச்சூழலிற்கும் உகந்ததில்லை. பொது நீராதாரங்களில் தங்களது உரிமையை நிலைநாட்டுவதும், தண்ணீர் தனியார்மயமாக்கம் செய்யப்படுவதற்கு எதிராகப் போராடுவதுமே தலித்துகளின் தண்ணீர் உரிமையை மீட்டெடுக்கும் என்கிற தீர்வை முன்வைக்கிறது இந்நூல்.* ●